முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.10.2021, வியாழக்கிழமை

1. தருமனே கலியினில் காத்திட
தவசியாக வந்து மாற்றம்
பெருமை மிக்க ஞானயுகமாக
பெருந்தொண்டாய் அன்னதான சேவை
2. சேவை ஆற்றி வருதல் காண
செகத்தார் அறிந்து வந்தாலே
அவனிமாறுமெனக் கூறியே
அறிவிப்பேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை பிலவ தரிவை திங்கள்
அய்நான்கோர் திகதி குருவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள், 07.10.2021 வியாழக்கிழமை)
பேசிடுவேன் பராசரிஷி யானும்
பேருலகம் அமைதிபெற உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கன் காட்டும்
உண்மை வழி மக்கள் வர
கறைபடியா ஊழல் பற்றா
கண்ணியமிக்க சமூகமாக மாறி
5. மாறியே அதிகார வர்க்கங்கள்
மாண்புமிகு தலைமைகளும்
ஆறுதலாய் மக்களை காத்திடும்
ஆற்றல் மிக்க தயவை கொண்ட
6. கொண்டநல் ஆளுமைகளாக
குறைகளை போக்கி மீட்கும்
தொண்டுமிக்க மனப்பான்மையோடு
தேசவளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டி
7. தீட்டியே ஆளுமைகள் சிறந்து
தெய்வ ஞான ஆட்சியாக
தட்டாமல் உலகம் கண்டடையும்
தவராஜன் அவதாரம் அறியப்பட
8. அறியப்படவே அகிலம் தானும்
ஆளுமைகளால் ஆபத்தின்றி
வரிக்கொடுமை துன்பமின்றி
வாழ்வாதாரம் பங்கம் காணா வண்ணம்

9. வண்ணமுடன் நிலைகள் தேறி
வையகம் வளர்ச்சி காணும்
எண்ணம் வழி எல்லோருக்கும்
எந்த கபடமுமில்லாத வண்ணம்
10. வண்ணமுடன் தயவே வடிவாகி
வாக்கில் தூய்மை செயலில் நேர்மை
மண்ணுலகம் பூரித்து செழிப்புற
மக்களின் தருமம் மிகுந்து நிற்கும்
11. நிற்கவே இறைநிந்தனை செய்யா
ஞானவான்கட்கு தீங்கு என்பதில்லா
அற்புதமிக்க ஞான ஆட்சியாக மாறும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–